செய்தி வெளியீடு எண்:416 நாள்:09.07.2021

<u>செய்தி வெளியீடு</u>

**ஜெர்மனியில் அமைந்துள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தொடர்ந்து, தொய்வின்றி இயங்க ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளித்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஜெர்மனியில் உள்ள ஐரோப்பா தமிழர்கள் கூட்டமைப்பு, ஓய்வுபெற்ற மூத்த தமிழ்ப் பேராசிரியர் உல்ரிக்க நிக்லாஸ் அவர்களும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

ஜெர்மனியில் அமைந்துள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை 58 ஆண்டு காலமாக இயங்கி வருகிறது. அங்குப் பணிபுரிந்த தமிழ்ப் பேராசிரியர் உல்ரிக்க நிக்லாஸ் அவர்கள் செப்டம்பர் 2020இல் ஓய்வு பெற்றபின், நிதிப்பற்றாக்குறையால் தமிழ்ப் பிரிவை மூடுவதாக அப்பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்தது.

கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குத் தேவையான நிதியில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாயை, 2019இல் முந்தைய ஆட்சியாளர்கள் தமிழக அரசின் சார்பில் அளிப்பதாக அறிவித்திருந்த நிலையில், அதனை உடனடியாக அளித்து அப்பல்கலைக்கழகத்திற்கு உதவ வேண்டுமென, அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியிருந்தார்கள்.

எனினும், தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட அத்தொகை விடுவிக்கப்படாததை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தொடர்ந்து, தொய்வின்றி, இயங்கிட தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாயை உடனடியாக கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு வழங்கிட உத்தரவிட்டார்கள்.

ஜெர்மனியில் உள்ள கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்க உத்தரவிட்டு, மகாகவி பாரதியின் கூற்றான தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தமைக்கு ஐரோப்பா தமிழர்கள் கூட்டமைப்பின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களுக்குத் தங்களது மனமார்ந்த நன்றிகளைத்

தெரிவித்துள்ளார்கள். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில், அர்ப்பணிப்புடனும், விடாமுயற்சியுடனும் செயல்பட்டுத் தமிழுக்கான அங்கீகாரத்தை உலக அரங்கில் அளிப்பதோடு, தமிழ்மொழியின் தொடர் பயன்பாட்டிற்கும், முன்னேற்றத்துக்கும் வலுச்சேர்த்துப் பல சர்வதேச பல்கலைக்கழகங்களில் தமிழ் இடம்பெறும் வண்ணம் இந்த நிதியுதவி அமைந்துள்ளது என்றும் தங்களது கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

கொலோன் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற மூத்த தமிழ்ப் பேராசிரியர் உல்ரிக்க நிக்லாஸ் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், தமிழுக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கும் தங்களின் ஆட்சி குறுகிய காலத்திலேயே இதனைப் பரிசீலித்துத் தக்க சமயத்தில் நிதியுதவி அளித்தமைக்குத் தனது மனமார்ந்த நன்றிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

•••••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9